JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-2Witness
for Prosecution

| CC.No. | 66/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | PW.2மாதேஸ்வரி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 09.03.2026 | | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 355ன் கீழ் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கருப்பு கவுண்டன் புதூரில் குடியிருந்து கொண்டு, கருப்ப கவுண்டன் புதூர் பிரிவு அருகில் பூர்ணா சிக்கன் என்ற பெயரில் சிக்கன் கடை வைத்துள்ளேன். தேதி மாதம் நினைவில்லை சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 6.00 மணியளவில் நான் எனது கடையில் இருந்த பொழுது இந்த விபத்தில் இறந்து போன மனநலம் பாதிக்கப்பட்ட தமிழரசி என்பவர் எனது கடைக்கு அருகில் சாலையின் ஓரமாக விபத்தில் அடிபட்டு கிடந்தார். நான் அருகில் சென்று பார்த்தேன்.

பின்னர் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலமாக அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகு தான் பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்குத்தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 18.09.2024 ஆம் தேதியன்று காலை சுமார் 5.50 மணியளவில் கருப்பு கவுண்டன் புதூர் பிரிவு அருகில் உள்ள எனது கடையில் இருந்ததாகவும், அப்போது இந்த விபத்தில் இறந்து போன தமிழரசி என்பவர் சக்தி – பவானி மெயின் ரோட்டில் கருப்பு கவுண்டன்புதூர் பிரிவு கந்தசாமி ஆட்டுக்கடை முன்பு மேற்கிலிருந்து கிழக்கு

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.09 18:45:01 +0530

நோக்கி ரோட்டை நடந்து சென்றதாகவும், அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த பைக் வேகமாக வந்து தமிழரசியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய் சாட்சி மொழிகிறேன் என்றால், சரியல்ல.

**எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.09 18:45:07 +0530

Sd/– (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2Witness
for Prosecution

| CC.No. | 66/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | PW.3 சுந்தர்ராஜன் | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 09.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கருப்பு கவுண்டன் புதூரில் குடியிருந்து கொண்டு, கருப்ப கவுண்டன் புதூர் பிரிவு அருகில் பூர்ணா சிக்கன் என்ற பெயரில் சிக்கன் கடை வைத்துள்ளேன். தேதி மாதம் நினைவில்லை சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 6.00 மணியளவில் நான் எனது கடையில் இருந்த பொழுது இந்த விபத்தில் இறந்து போன மனநலம் பாதிக்கப்பட்ட தமிழரசி என்பவர் எனது கடைக்கு அருகில் சாலையின் ஓரமாக விபத்தில் அடிபட்டு கிடந்தார். நான் அருகில் சென்று பார்த்தேன். பின்னர் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலமாக அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகு தான் பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்குத்தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

கடந்த 18.09.2024 ஆம் தேதியன்று காலை சுமார் 5.50 மணியளவில் கருப்பு கவுண்டன் புதூர் பிரிவு அருகில் உள்ள எனது கடையில் இருந்ததாகவும், அப்போது இந்த விபத்தில் இறந்து போன தமிழரசி என்பவர் சக்தி – பவானி மெயின் ரோட்டில் கருப்பு கவுண்டன்புதூர் பிரிவு கந்தசாமி ஆட்டுக்கடை முன்பு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டை நடந்து சென்றதாகவும், அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.09 18:45:14 +0530

வந்த பைக் வேகமாக வந்து தமிழரசியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய் சாட்சி மொழிகிறேன் என்றால், சரியல்ல.

**எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.09 18:45:20 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-5 Witness
for Prosecution

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 66/2025 | Crime No. | 256/2024 | Station | Appakudal |

| | | | |
|---|---|---|---|
| Name | PW–5–திரு.முருகையயன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 09.03.2026 | | | |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை–**

நான் தற்பொழுது கோவை மாவட்டம், காரமடை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி வட்ட காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 19.09.2024–ம் தேதியன்று, ஆப்பக்கூடல் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.திருநாவுக்கரசு என்பவர் நிலைய அலுவலிலிருந்தபோது மலைசாமி என்பவரது மகன் பழனிசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.256/2024, U/s.281, 106(1) of BNS–கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நிலைய உதவி ஆய்வாளர் வில்சன் சகாயராஜ் என்பவர் 20.09.2024–ம் தேதியன்று காலை 8.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான குணசேகரன் மற்றும் பெரியசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் பழனிசாமி, மாதேஸ்வரி, சுந்தரராஜன், குணசேகரன் மற்றும் பெரியசாமி ஆகியோர்களை விசாரித்து, தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

பின்னர் 21.09.2024 தேதியன்று காலை 10.30 மணிக்கு பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு விபத்தில் இறந்து போன தமிழரசி என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்துதாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை மு.நி.காவலர் தினேஷ்குமார் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான பொன்னுதாய், லதா, வீரராகவன், தேவேந்திரன், செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து, தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.09 18:45:26 +0530

பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்ட போது மாதிரி வரைபடத்துடன் ஒத்திருந்ததால் புதியதாக எதுவும் தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடம் கூறியதால் புதியதாக வாக்குமூலம் எதுவும் தயார் செய்யவில்லை. கடந்த 26.09.2024–ம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி சுப்பிரமணி என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும் தக்க பிணையில் விடுவித்தேன்.

விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். 30.09.2024–ம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் குணசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **TN 39 BY 3262 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் விபத்தில் இறந்து போன தமிழரசி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி அய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 30.09.2024-ம் தேதியன்று, எதிரி மீது U/s.281, 106(1) of BNS– கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல். சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும், சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல .

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.09 18:45:33 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani